# உடற்கல்வி மற்றும் நல்வாழ்வு

வகுப்பு - மூன்று



அரசு தீர்மானம் எண். அபப்யாஸ்-2116/(ப்ர எண் 43/16) எஸ்டி - 4 இன்படி 25.04.2016 அன்று நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 19.05.2026 ஆம் நாள் கூட்டத்தில் இப்பாடநூல் 2026-2027 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# உடற்கல்வி மற்றும் நல்வாழ்வு

## வகுப்பு மூன்று



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411 004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் கியூ.ஆர். குறியீட்டை உங்கள் ஸ்மார்ட்போன் மூலம் ஸ்கேன் செய்வதன் மூலம், பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி-ஒளி வடிவிலான கற்றல்-கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு : 2026

© மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்குழு, புனே - 411 004.

இந்த புத்தகத்தின் அனைத்து உரிமைகளும் மகாராஷ்டிரா மாநில பாடப்புத்தக தயாரிப்பு மற்றும் பாடத்திட்ட ஆராய்ச்சி குழுவிடம் உள்ளன. இந்த புத்தகத்தின் எந்தப் பகுதியையும் இயக்குநர், மகாராஷ்டிரா மாநில பாடப்புத்தக தயாரிப்பு மற்றும் பாடத்திட்ட ஆராய்சி குழுவின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுபதிப்பு செய்யக் கூடாது.

## ஆரோக்கியம் மற்றும் உடற்கல்வி பாடக்குழு

திரு. பிரமோத் பார்சி, தலைவர்

திரு. பரத்கோஹலி, உறுப்பினர்

டாக்டர். பரத்பங்கர், உறுப்பினர்

டாக்டர். ஜோத்ஸ்னா ஜாதவ், உறுப்பினர்

திருமதி. நீதா ஜாதவ், உறுப்பினர்

டாக்டர். தீபகெஷண்ட்கர், சிறப்பு அழைப்பாளர்

டாக்டர். ஆனந்த் யாதவ், சிறப்பு அழைப்பாளர்

திரு. ஷைலேஷ் நாயக், சிறப்பு அழைப்பாளர்

திரு. மிருனால் தேசாய், சிறப்பு அழைப்பாளர்

திரு. கேதார்தண்டோ, சிறப்பு அழைப்பாளர்

டாக்டர். மன்மத்கினிபான்சே, சிறப்பு அழைப்பாளர்

டாக்டர். மந்தாகினி பான்சே, சிறப்பு அழைப்பாளர்

டாக்டர். சித்ராதாபோல்கர், சிறப்பு அழைப்பாளர்

திருமதி. மமதா பவார், பிரதிநிதி (ம.ரா.அ.பி.ப)

டாக்டர். சந்தியாஜிந்தூர்கர், உறுப்பினர் - செயலாளர்

## தரமதிப்பீட்டாளர்

டா. கோ.வி. பார்கவ்கர், தர பரிசேதகர்

டா. உ.நா. கெண்டே, தர பரிசோதகர்

வழக்கிரஞர். மனீஷ் உபாத்யே, சட்ட வல்லுநர்

பேரா. கிருதிகா கந்தே, (CWSN நிபுணர்)

## ஒருங்கிணைப்பாளர்

**டாக்டர். சந்தியாஜிந்தூர்கர்**

சிறப்பு அதிகாரி, ஆரோக்கியம் மற்றும் உடற்கல்வி (வி.கா.) பாடப்புத்தககுழு, புனே.

அட்டைப்படம் : திருமதி. அஷ்வினி குல்கர்னி

அலங்காரம் : திரு. விஜய்குமார் ஷிண்டே, திருமதி. அஷ்வினி குல்கர்னி திரு. சுஷில் குணவந்தே

எழுத்து அமைப்பு : முத்ரா பிரிவு, பாடப்புத்தக குழு, புனே.

அச்சு கோர்ப்பு : ஜே.கே. ஆர்ட்ஸ், மும்பை

தாள் : 70 ஜி.எங்.எம். கிரீம்வோவ்.

அச்சு ஆணை :

அச்சகர் :

## தயாரிப்பு

**திருமதி. மிதாலி ஷித்தப்**

பேராசிரியர் I/C முதன்மை தயாரிப்பு அதிகாரி

**திரு. சந்தீப் அஜகாவ்கர்**

தயாரிப்பு அதிகாரி

## வெளியிடுவோர்

**திரு. ஹேமந்த் வி. பாபர்**

I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கக் கழகம், பிரபாதேவி, மும்பை - 25.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### பகுதி 4 A

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ॥धृ॥

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ॥१॥

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ॥२॥

# முன்னுரை

தேசிய கல்விக்கொள்கை 2020-ன் படி, 2023ம் ஆண்டு பள்ளிக்கான தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு வெளியிடப்பட்டது.

இந்த கட்டமைப்பு, மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் மகாராஷ்டிராவின் தேவைகள் சிறப்புகள், மரபுகளை கருத்தில் கொண்டு மகாராஷ்டிர மாநிலத்திற்கான பள்ளிக்கல்வி பாடத்திட்ட கட்டமைப்பு 2024 **(SCF-SE)** தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில், உடற்கல்வி மற்றும் ஆரோக்கியம் பாடத்திட்டத்திற்கான புதிய பாடப்புத்தகத் தொகுப்பு பாடப்புத்தக குழுவால் வெளியிடப்படுகிறது. இந்த தொகுப்பில் 3-ம் வகுப்பு உடற்கல்வி மற்றும் ஆரோக்கிய பாடப்புத்தகத்தை உங்கள் கைகளில் கொடுப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

குழந்தைமைகற்றல் - கற்பித்தல் செயல்முறை மற்றும் செயல்பாட்டு அனுபவகற்றலுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்கக்கல்வி நிலையின் முடிவில், மாணவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான உடல், மன, அறிவு, உணர்வு, ஆண்மீக மற்றும் சமூக திறன்களைப் பெறவேண்டும். மேலும் கற்றல் செயல்முறை சுவாரஸ்யமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த பாடப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடப்புத்தகத்தில் பாடப் பொருளின் கவர்சிகரமான வழங்கலும் படங்களும் மாணவர்களை எப்போதும் கவரும். பல படங்கள் மூலம் உடற்கல்வியின் பல்வேறு செயல்பாடுகளை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் செய்வார்கள். மாணவர்களின் வயதை கருத்தில் கொண்டு அவர்களின் அனைத்து உடல் திறன்களும் இன்னும் முழுமையாக வளரவில்லை எனவே, இந்த புத்தகத்தில் அவர்களின் இயல்பான விளையாட்டு மீதான ஆர்வம் மற்றும் தொடர்ந்து செயல்படும் பழக்கத்தை கருத்தில் கொண்டு அவர்களின் செயல்பாட்டிற்கு வாய்ப்பு அளிக்கும் மற்றுமம் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய படங்களுடன் கூடிய செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான அனைத்து திறன்களும் வளரவேண்டும் என்ற நோக்கில் பல்வேறு வகையான உடற்பயிற்சிகள், பொழுது போக்கு மற்றும் புதிய செயல்பாடுகள் இந்த பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகம் முடிந்தவரை பிழையற்றதாகவும் உயர்தரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கில், மகாராஷ்டிராவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பாட வல்லுநர்களால் இந்தப் புத்தகம் மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்கள் கொடுத்த ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை உடற்கல்விகுழு உரிய முறையில் பரிசீலித்து இந்த புத்தகத்திற்கு இறுதி வடிவம் கொடுத்துள்ளது. மதிப்பீட்டின் போது அனைவரும் கொடுத்த ஒத்துழைப்புக்குழு நனிற தெரிவிக்கிறது.

குழுவின் வகுப்பு வாரியான பாடக்குழு, அழைக்கப்பட்ட பாடவல்லுநர்கள் மற்றும் ஓவியர்களின் கூட்டு முயற்சியால் இந்த பாடப்புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த பாடப்புத்தகத்தை வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**(அனுராதா ஓக்)**
இயகஙகுநர்
மகாராஷ்டிரா மாநில பாடநூல்
தயாரிப்பு மற்றும் பாடத்திட்ட
ஆராய்ச்சி வாரியம், புனே.

புனே
நாள்: 11 ஏப்ரல், 2026,
இந்திய ஆண்டு: 02 வைசாக் 1948
அக்ஷய திருதிய

## ஆசிரியர்களுக்காக

### வகுப்பு எடுக்கும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

1. உடற்கல்வி மற்றும் ஆரோக்கியபாட வகுப்பை எப்போதும் க.கீ. வகுப்பாக எடுக்காதீர்கள்.
2. உடற்கல்வி மற்றும் ஆரோக்கிய பாட வகுப்பை மாணவர்களின் உடல் திறனை வளர்ப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை வளர்ப்பதற்காகவும் மட்டுமே எடுக்க வேண்டும். மற்ற பாடங்களுக்கோ அல்லது வேறு வேலைக்கோ இதை பயன்படுத்தக்கூடாது.
3. மாணவர்களிடம் மைதானத்திற்கு சென்று வருவதற்கான ஒழுக்கத்தை வளர்கவும்.
4. ஆசிரியர் மாணவர்களை மைதானத்தில் விழிப்புடன் இருக்கவும், மற்ற மாணவர்களின் திறனை கவனிக்கவும் அறிவுறுத்த வேண்டும்.
5. மாணவர்களை குழுக்களாக பிரிக்கும் போது, குழுக்கள் சமநிலையில் இருக்க அவர்களின் திறன், வயது, எடை மற்றும் உயரத்தை கருத்தில் கொள்ளவும்.
6. பாடத்திட்டத்தை இவ்வாறு திட்டமிடுங்கள், ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு செயல்பாட்டையும் திறனையும் பயிற்சி செய்யவும், விளையாட்டு உபகரணங்களை கையாளவும் வய்ப்பு கிடைக்க வேண்டும்.
7. ஒவ்வொரு நாளுக்கும்ட வகுப்பின் திட்டத்தை தயார் செய்து, அதன்படி மைதானத்தை முன்கூட்டியே தயார் செய்யவும். மைதானத்தில் தடைகள் இருக்கக்கூடாது.
8. வகுப்பின் போது செயல்பாடுகளை மாற்றும்போதும், உபகரணங்களை விநியோகிக்கும் போதும் நேரம் வீணாகாமல் பார்த்துக் கொள்ளவும்.
9. மைதானம், உபகரணங்கள் போன்றவற்றில் குறைவு அல்லது சிரமம் இருந்தால், இருக்கும் வசதிகளை படைப்பாற்றலுடன் பயன்படுத்தவும் மற்றும் உடற்கல்வி பாடத்திற்கு முழு நியாயம் செய்ய முயற்சிக்கவும்.
10. வானிலை காரணமாக மைதானத்தில் உடற்கல்வி வகுப்பு எடுக்க முடியாவிட்டால், வகுப்பறையிலோ அல்லது அரங்கிலோ உடற்கல்வி செயல்பாடுகளை எடுக்கவும். இந்த புத்தக த்தில் நான்கு சுவர்களுக்குள் செய்யக்கூடிய செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. எ.கா. தடைசங்கிலி, உடற்பயிற்சி சங்கிலி, அடிப்படை செயல்பாடுகள், யோகா அறிமுகம், ஆரோக்கிய கல்வி போன்றவை.
11. உடற்கல்வி, யோகா பயிற்சி மற்றும் ஆரோக்கியம் தொடர்பான செயல்பாடுகளை கற்பிக்கும் போது, மாணவர்களுக்கு சரியான வாழ்க்கை திறன்கள் பற்றிய தகவல்களை கொடுக்கவும், அந்த திறன்களை அவர்கள் கடைபிடிக்க தொடர்ந்து முயற்சிக்கவும்.
12. ஆசிரியர் தனது பாடம் கற்றிய அறிவை எப்போதும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் மற்றும் கற்பித்தலில் தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும்.
13. பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர் பெற்றோர்களுக்கு இந்த பாடம் பற்றிய தகவலை கொடுக்க வேண்டும். மாணவர்களின் உறுதி மற்றும் ஆரோக்கியத்திற்கு விளையாட்டு, உடற்பயிற்சி, செயல்பாடு, உணவு போன்றவற்றின் முக்கியத்துவத்தை விளக்கி, அவற்றால வளரும் நற்குணங்கள் பற்றி தெரிவிக்கவும். மேலும் தகவல் தேவைப்பட்டால் அவர்களுக்கு உடற்கல்வி மற்றும் ஆரோக்டகியம் என்ற பாடப்புத்தகத்தை பரிந்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும்.
14. பாடப்புத்தகத்தில் செயல்பாடுகள் மற்றும் உடற்பயிற்சிகளுக்கு ஆங்கில வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஏனெனில் அவை வழக்கத்தில் உள்ளன அவற்றை இந்தியில் மொழிபெயர்க்கும் போது செயலின் அர்த்தம் மாறும் வாய்ப் உள்ளது.
15. அனைத்து மாணவர்களுக்கும் வருடத்திற்கு 2 முறை முருத்துவ பரிசோதனை செய்வது அவசியம்.
16. உடல்நலம் சரியில்லாத அல்லது நோயில் இருந்து சமீபத்தில் குணமடைந்த மாணவர்களுக்கு உடனடியாக கடினமான உடற்பயிற்சிகளை செய்ய வைக்காதீர்கள் மற்றும் போட்டிகளிலும் பங்கேற்க அனுமதிக்காதீர்கள்.
17. சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களிடம் ஆசிரியர் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் திறனுக்கு ஏற்ப செயல்பாடுகளையும் உடற்பயிற்சிகளையும் செய்ய வைக்கவும். அவர்களை உடற்கல்வியில் இருந்து விலக்காமல், அவர்களின் திறனுக்கு ஏற்ப பொருத்தமான செயல்பாடுகளை திட்டமிடவும்.
18. விளையாட்டு மைதானத்தில் மருத்துவர், ஆம்புலன்ஸ் போன்றவற்றின் அவசர தொலைபேசி எண்கள் இருக்க வேண்டும், முதலுதவி பெட்டி மைதானத்திற்கு அருகில் வைக்கப்பட வேண்டும்.

பாடத்திட்ட நோக்கம் : CG-1 பல்வேறு உடல் செயல்பாடுகள் / செயல்கள், விளையாட்டு / விளையாட்டுகளில் பங்கேற்க அடிப்படை திறன்கள் பயன்படுத்துவதை நிரூபித்தல் எ.கா. ஓடுதல், குதித்தல், பிடித்தல், எறிதல் போன்றவை.

| திறன் | கற்றல் விளைவுகள் | பக்க எண் |
|---|---|---|
| C-1.1 உடல் செயல்பாடுகள், உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆகியவற்றை திறம்பட செய்வதற்கு அடிப்படை திறன்களை பயன்படுத்துகிறது. எ.கா. பிடித்தல், எறிதல், உதைத்தல் போன்றவை கூட்டு பயிற்சிகள் மற்றும் விளையாட்டில் ஈடுபடுவதற்கு உதவுகின்றன. இதில் குறி வைத்து எறிதல் பந்தை அடித்தல் ஆகியவையும் அடங்கும். | 1. பல்வேறு உடல் செயல் பாடுகளை திறம்பட செய்வதற்கு அடிப்படை திறன்களை பயன்படுத்துகிறது.<br>2. பல்வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் சேர்ந்து செயல்பட முடியும்.<br>3. இலக்கை அடைவதற்கு உடல் செயல்பாடுகளை சரியாக பயன்படுத்துகிறது, மற்றும் பயிற்சி செய்கிறது.<br>4. ஓடுதல், பிடித்தல், உதைத்தல், பந்து வீசுதல் போன்ற அடிப்படை திறன்களை பயன்படுத்தி விளையாடுகிறது.<br>5. குழு விளையாட்டுகளில் பங்கேற்று விளையாடும் போது தேவையான திறன்களை பயன்படுத்துகிறது.<br>6. ஓடுதல், தாண்டுதல், மற்றும் எறிதல் தொடர்பான செயல்களை செய்கிறது.<br>7. சமநிலை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் திறன்களை பயன்படுத்தி செய்கிறது.<br>8. இந்திய உடற்பயிற்சி முறையை அறிந்துள்ளது. | 1,2,3,4,5<br>6,7,8,9,10<br>6,7,16<br>45-70<br>41,74-78<br>3-38, 40,45-70<br>72<br>40-41 |
| C-1.2 உடலின் சமநிலை, ஒருங்கிணைப்பு, தாளம் மற்றும் இசை ஆகியவற்றை பயன்படுத்தி செய்கிறது. | 1. இசைக்கு ஏற்ப தாளத்தில் செயல்படுகிறது.<br>2. உடல் மற்றும் குழு சாரந்த செயல்களை உற்சாகத்துடன் செய்கிறது.<br>3. உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியுடன் இருக்கிறது.<br>4. உடல் இயக்கத்தில் சரியான முறையை பயன்படுத்துகிறது. | 33-38<br>34-36<br>85<br>42-44 |
| C-1.3 பொருள்கள் மற்றும் தோழர்களுடன் சேர்ந்து சமநிலையை பராமரிக்கிறது. எ.கா. மூன்று கால ஓட்டம், கூட்டு ஓட்டம் போன்டற விளையாட்டுகளில் பங்கேற்கிறது பந்தை பிடிக்கும் போது கண்கள் மற்றும் கைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை பயன்படுத்துகிறது. | 1. பொருட்கள் மற்றும் தோழர்களுடன் சேர்ந்து விளையாடும் போது சரியான இடத்தை தேர்வு செய்கிறது.<br>2. உடல் உழைப்பு விளையாட்டு மற்றும் விளையாட்டில் நேரத்தை சரியாக ஒருங்கிணைக்கிறது.<br>3. விளையாடும் போது குழு செயல்பாடுகளை புரிந்து கொண்டு அவற்றில் பங்கேற்கிறது மற்றும் மற்றவர்களுக்கு உதவுகிறது.<br>4. விளையாட்டின் விதிகளை அறிந்து அவற்றை பின்பற்றுகிறது.<br>5. விளையாட்டு கற்றுக் கொண்டு பயிற்சி செய்யும் போது மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது. | 20-38,45-72<br>11-72<br>11-72<br>11-41,45-72<br>45-72 |
| C-1.4 உடல் வலிமை மற்றும் நெகிழ்வுத்தன்மையை வளர்க்க உடல் செயல்பாடுகள் மற்றும் உடற்பயிற்சிகளை பயன்படுத்துகிறது. | 1. உடல் வலிமையை வளர்க்க பல்வேறு வகையான உடற்பயிற்சிகள் உடல் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளை செய்கிறது. இதன் மூலம் நெகிழ்வுத்தன்மை அதிகரிக்கும். | 11-41<br>45-78 |
| பாடத்திட்ட நோக்கம் : CG-2 சுய மற்றும் பிறருடன் நேர்மறையான நடத்தை மற்றும் சமூக உணர்வுகளை வெளிப்படுத்தல். | | |
| C-2.1 குழு உணர்வு, ஒத்துழைப்பு, தனிப்பட்ட பொறுப்பு மற்றும் கருத்துப் பரிமாற்றம் தேவைப்படும் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடும் திறனை வெளிப்படுத்துகிறோம். | 1. பல்வேறு விளையாட்டுகளை விளையாடும் போது சம சண்பர்களுடன் ஓர் அங்கத்துவ உணர்வைப் பேணுகிறார்.<br>2. தனிப்பட்ட பொறுப்புணர்வை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்கிறார்.<br>3. சக ஊழியருடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் ஒத்துழைப்பு மற்றும் உணர்திறனை வெளிப்படுத்துதல், ஒன்றாக விளையாடும் திறனை வளர்க்கிறது. | 45-73<br>11-41,45-73<br>45-65 |
| C-2.2 விளையாட்டின் தொடக்கத்தில் விதிகளை ஏற்றுக் கொண்டு அவற்றை பின்பற்றுகிறது. | 1. விளையாட்டு விளையாடும் போது விதிகளை ஏற்றுக் கொள்கிறது. | 45-65 |
| C-2.3 விளையாடும் வீரர் காயமடைந்தாலோ மன அழுத்தத்தில் இருந்தாலோ அல்லது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலோ அவர் வலியை எளிதில் உணர்வார். | 1. நோய்வாய்ப்பட்ட அல்லது காயமடைந்த சம வீரரின் மீது பரிவு காட்டுதன் மூலம் அவருக்கு உதவுகிறார். | 81 |
| C-2.4 விளையாட்டு மைதானம் பொருட்கள் மற்றும் வசதிகளை பாதுகாக்கிறது. | 1. விளையாட்டு மைதானத்தின் தூய்மைக்கு பொறுப்புடன் செயல்படுகிறது.<br>2. விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வசதிகளை பாதுகாப்பாக பயன்படுத்துகிறது. | 82<br>83,84 |

| | | |
|---|---|---|
| C-2.5 விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளின் போது ஏற்படும் நல்ல மற்ற கெட்ட தொடுதல்களை அடையாளம் கண்டு தேவைப்படும் போது அவற்றை பெரியவர்களிடம் தெரிவிக்கிறார். | 1. பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுதலுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்கிறார்.<br>2. வேண்டுமென்றே செய்யப்படும் முறையற்ற தொடுதலை உரிய நபரிடம் தெரிவிக்க வேண்டும்.<br>3. விளையாடும் போது முறையற்ற விதத்தில் தொடுதல் நிகழாமல் பார்த்துக் கொள்கிறார். | 85<br>85<br>85 |
| பாடத்திட்ட நோக்கம் : CG-3 உடல் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளில் மனதளவில் ஈடுபடுதல். | | |
| C-3.1 சில விளையாட்டுகளின் பெயர்கள், அடிப்படை நிலைகள், விதிகள் மற்றும் நகர்வுகளை விளக்குகிறது. | 1. பல்வேறு விளையாட்டுகளின் பெயர்கள் மற்றும் அடிப்படை வடிவங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களை அவரவர் மொழியில் வழங்குகிறது. | 85-72 |
| C-3.2 விளையாட்டின் போது உங்கள் சிந்தனைப் போக்கையும் உணர்ச்சி நிலையையும் விவரிக்கிறது. | 1. உடல் உறுதி மற்றும் செயல் திறனுக்கான தனிப்பட்ட அளவை அறிந்துள்ளது.<br>2. பல்வேறு விளையாட்டுகள் உடற்பயிற்சி உபகரணங்கள் போன்றவற்றுக்கு தினசரி பயிற்சிக்கு நேரத்தை ஒதுக்குகிறது. | 11-72<br>86 |
| பாடத்திட்ட நோக்கம் : CG-4 தனது முன்னேற்றம் மற்றும் சுய மதிப்பீட்டின் அவசியத்தை புரிந்துக் கொள்ளுதல். | | |
| C-4.1 எளிய, தெளிவான, தனிப்பட்ட இலக்குகளை நிர்ணயித்து தனது முன்னேற்றத்தை மதிப்பீடு செய்கிறது.<br>எ.கா. முதலில் 25மீ, பின் 30மீ, பின் 40மீ பந்தை வீசுதல். உயரம் அல்லது நீளம் தாண்டுதல். | 1. சரியான உணவு பழக்கங்களை அறிந்து அவற்றை பின்பற்ற முயற்சிக்கிறது.<br>2. சரியான பழக்கங்களை வளர்த்துக் கொள்கிறது. | ௭௯-௮௫ |

- **சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுடன் கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மேற்கொள்ளும் போது சைகை மொழி** (Sign Language) **மற்றும் பிற புலன் சார்ந்த அறிவியல் கற்பித்தல் முறைகளை பயன்படுத்தவும்.**
- **சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்கு அவர்களால் முடிந்த வகையில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்பு வழங்கவும்.**
- **வாய்மொழி விதிமுறைகளை வழங்குவதற்கு கூடுதலாக பட அட்டை, உடல் அசைவுகள் காட்சி சமிக்ஞைகள்** Placard, **குறிப்புகள் போன்றவற்றையும் பயன் படுத்தவும்.**



Tele MANAS
National Tele Mental Health Programme
14416

# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி- மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

**தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.**

# மனோதர்பன்

**வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.**

# பொருளடக்கம்

**பிரிவு 1 : அடிப்படை செயல்பாடுகள் ........ 1**

1.1 ஒரே இடத்தில் செய்யப்படும் செயல்பாடுகள் ........ 1

1.2 இடங்களை மாற்றும் போது செய்ய வேண்டி செயல்பாடுகள் ........ 3

1.3 உபகரணங்களுடன் செய்யப்படும் செயல்பாடுகள் ........ 6

1.4 சரியான உடல் நிலை மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ........ 10

**பிரிவு 2 : பல்வேறு உடற்பயிற்சிகள் ........ 11**

2.1 பொதுவான உடற்பயிற்சிகள் ........ 11

2.2 சிறப்பு உடற்பயிற்சிகள் ........ 14

- ஏபிசி ட்ரில்ஸ் ........ 15
- திசை சார்ந்த பயிற்சி ........ 16

2.3 தடைச்சங்கிலி ........ 20

2.4 உடற்பயிற்சி தொடர் ........ 24

2.5 சாகச உடற்பயிற்சி ........ 30

- ஜங்கிள்ஜிம் ........ 30
- மனித போபுரங்கள் ........ 31

2.6 தாளப் பயிற்சிகள் ........ 33

- ஏரோபிக்ஸ் ........ 33
- உபகரணமில்லா பயிற்சி ........ 33
- உபகரணத்துடன் கூடிய பயிற்சி - வளைய பயிற்சி ........ 34
- நடன பாணி உடற்பயிற்சி ........ 38

2.7 இந்திய உடற்டபயிற்சி ........ 40

- புக்டி ........ 40
- ஜிம்மா ........ 40
- கயிறுகுதித்தல் ........ 40

2.8 சூரிய நமஸ்காரம் ........ 41

**பிரிவு 3 : அணிவகுப்புப் பயிற்சி ........ 42**

3.1 கவனம்/சாவ்தான் ........ 42

3.2 ஒய்வு/விஷ்ராம் ........ 43

3.3 இலகுவாக/ஆராம்சே ........ 43

3.4 சல்யூட்/வணக்கம் ........ 44

3.5 அடிதாளம் மற்றும் நிறுத்தம் ........ 44

3.6 ஓடியபடி அடிதாளம் மற்றும் நிறுத்தம் ........ 44

**பிரிவு 4 : பல்வேறு விளையாட்டுளள் மற்றும் ஓட்டம்......45**

4.1 பல்வேறு விளையாட்டுகள்......45

- சிறு விளையாட்டுகள் ......53
- பாரம்பரிய விளையாட்டுகள் ......53
- பொழுதுபோக்கு விளையாட்டுகள் ......57

4.2 ஓட்டம்......58

4.3 நிரப்பு விளையாட்டுகள்......65

4.4 தடகளத்திற்கான முன் தயாரிப்பு ......70

4.5 மல்யுத்தம்......72

4.6 நீருடன் பழகுதல் ......73

**பிரிவு 5 : யோகா பயிற்சி......74**

5.1 யோகா விதிமுறைகள் ......74

5.2 யோகா பயிற்சி பிரார்த்தனை......75

5.3 ஆசனங்கள்......76

5.4 பிராணாயாமத்திற்கான முன் தயாரிப்பு......78

**பிரிவு 6 : ஆரோக்கியம் ......79**

6.1 ஆரோக்கியத்தின் கூறுகள் ......79

6.2 சுகாதாரம்......80

- தனி நபர் சுகாதாரம் ......80
- உணவு ......80
- உடற்பறிற்சி ......81
- ஓய்வு மற்றும் தூக்கம் ......81

6.3 விளையாட்டு மைதானம் பழக்கங்கள், மற்றும் சுகாதாரம் ......82

6.4 உடை ......83

6.5 விளையாட்டு உபகரணங்கள்......83

6.6 விளையாட்டு மைதானத்தில் பாதுகாப்பு......84

6.7 முதலுதவி ......84

6.8 தீய பழக்கங்களை தடுத்தல்......85

6.9 தொடுதல் பற்றிய புரிதல் ......85

**பிரிவு 7 : சுய மதிப்பீடு......86**

7.1 சுய மதிப்பீட்டு அட்டவணை ......86

**பிரிவு 8 : இணைப்பு......91**

8.1 சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்காக......91

8.2 அனுமதி பெறும் முறை ......93

8.3 திட்டமிடல்......76

# சுத்தம் செய்வது நம் பொறுப்பு !

**இன்றிலிருந்து எனது வீடு, பள்ளி மற்றும் வளாகத்தைச்ட சுத்தமாக வைத்துக்கொள்வேன்**



**தினமும் இருமுறை, சரியான நேரத்தில் பல் துலக்குவேன்**





**கைகளை கழுவுதல் மற்றும் நகங்களை வெட்டுதல்**



**முடி வெட்டுதல்**



**சுத்தமான சீருடை அணிதல்**





**நிறைய தண்ணீர் குடித்தல்**

# பிரிவு1 : அடிப்படை செயல்பாடுகள்

## 1.1 ஒரே இடத்தில் செய்யப்பட வேண்டிய செயல்பாடுகள்

குனிதல், வளைதல் மற்றும் திரும்புதல் போன்ற பல்வேறு அசைவுகளைக் கவனித்து அவற்றைச் செய்யுங்கள், உங்களால் இது போன்ற வேறு ஏதேனும் அசைவுகளைச் செய்ய முடியுமா?



பின்நோக்கி குனிதல்



முன்நோக்கி குனிதல்





குனிதல் - இரண்டு பக்கமும் (வலது-இடது பக்கம்)



திரும்புதல்



திருகுதல்



**ஊர்ந்து செல்லுதல்**





**வெவ்வேறு வழிகளில்**
**சமநிலைப்படுத்துதல்**

## சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

1. கொடுக்கப்பட்டுள்ள அனைத்து அடிப்படை அசைவுகளையும் செய்து பார்த்தீர்களா என்பதைத் தெரிவிக்கவும்.

   ✓ஆம் ☐  இல்லை ☐

2. இந்த அசைவுகளில் உங்களுக்கு எது எளிதாக இருந்தது என்பதைக் குறித்துக்கொள்ளுங்கள் __________
3. உங்களுக்கு சிரமமாக இருந்த அசைவுகள் எவை என்பதை குறித்துக் கொள்ளுங்கள் _______
4. கடினமாகத் தோன்றும் அசைவுகளை நண்பரின் உதவியுடன் செய்யுங்கள்.

## 1.2 இடங்களை மாற்றும் போது செய்ய வேண்டிய செயல்பாடுகள்



நடத்தல்



ஓடுதல்



ஒற்றைக்கால் துள்ளல் (லங்டி)



குதித்தல்



பாய்ந்து ஓடுதல்



பந்தை திசை மாற்றி வீசுதல்





தந்திரமாக ஓடுதல்



துள்ளித் துள்ளி நடத்தல்




**முன்னோக்கி குட்டிக்கரணம்**






**பின்னோக்கி குட்டிக்கரணம்**

## சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- இடங்களை மாற்றும் இந்த நகர்வு உங்களுக்குப் பிடித்திருந்தா இல்லையா என்பதைக் ✓குறியிடவும் ☐ ஆம் ☐ இல்லை
- இவைகளைத் தவிர வேறு ஏதேனும் இயக்கங்கள் தெரியுமா? அவற்றை செய்து ஆசிரியரிடம் காட்டுங்கள். ✓குறியிடவும் ☐ ஆம் ☐ இல்லை
- உங்களால் முன்னோக்கி குட்டிக்கரணம் போட முடியுமா? என்பதை ✓குறியிடவும் ஆம் ☐ ☐ இல்லை
- உங்களால் பின்னோக்கி குட்டிக்கரணம் போட முடிந்ததா என்பதைக் ✓குறியிடவும் ☐ ஆம் ☐ இல்லை

## 1.3 உபகரணங்களுடன் செய்யப்படும் செயல்பாடுகள்



பந்தை உதைத்தல்



பந்தை நிறுத்துதல்



பந்தை திருப்பி அனுப்புதல்

**சுய மதிப்பீடு**

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- படத்தில் காட்டியுள்ளபடி பந்தை உதைக்க முடியுமா எனக் ✓குறியிடுக ☐ ஆம் ☐ இல்லை
- உங்கள் வகுப்பில் யார் பந்தை நன்றாக திருப்பி அனுப்புகிறார்கள் என்பதை எழுதுங்கள் _ _ _ _ _ _ _ _





பந்தைத் உருட்டுதல்



பந்தை தரையில் தட்டுதல்



பந்தை வீசுதல் மற்றும் பிடித்தல்





பந்தை வீசுதல் மற்றும் பிடித்தல்



**பந்தை திருப்பி அனுப்புதல்**



**கயிறு தாண்டுதல்**

### சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- உங்கள் அணி வீரரிடம் பந்தைத் திரும்பப் பெற்றீர்களா என்பதைக் ✓குறியிடுக ☐ ஆம் ☐ இல்லை
- உங்கள் _________ நண்பர் _________ முறை கயிறு தாண்டினார்.



## பாராசூட் செயல்பாடு

**மாணவர்கள் படத்தில் காட்டியுள்ளபடி பாராசூட்டைப் பிடித்து, பின்வரும் அசைவுகளைச் செய்ய வேண்டும் -**

- கைகளை மேலும் கீழும் அசைத்தல்.
- கைகளை உயர்த்தியபடி உட்காருதல்.
- அனைவரும் கைகளை உயர்த்தி, நடுவில் வந்து பின் திரும்பவும் தங்கள் இருக்கை களுக்கு செல்லுதல்.
- கைகளில் பிடித்துள்ள பாராசூட்டின் பகுதியை வலது பக்கமாக சுற்றி அனைவரும் உள்ளே உட்காருதல்.
- அனைவரும் வட்டமாக சுற்றுதல்.
- அனைவரும் பாராசூட்டை லேசாக இழுத்துப் பிடித்துக் கொண்டு அதன் பெரிய பந்தை எறிந்து அதை உயரமாகப் பறக்கவிட்டு பாராசூட்டிலேயே பிடித்தல்.
- அனைவரும் பாராசூட்டை லேசாக இழுத்துப் பிடித்துக் கொண்டு அதன் மீது 15 முதல் 20 ஃப்ரிஸ்பீக்களை எறிந்து மீண்டும் அவற்றை பாராசூட்டில் பிடித்தல்.

## 1.4 சரியான உடல் நிலை மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு



வயிற்றை அழுத்தி
செய்யும் படகாசனம்



முன்னோக்கி குனிதல்



பின்னோக்கி வளைதல்



தோழனை நோக்கி திரும்பி பந்தை
கொடுத்தல்



அரை அமர்வு

# பிரிவு ௨ : பல்வேறு உடற் பயிற்சிகள்

## 2.1 பொதுவான உடற்பயிற்சிகள்



முன்னோக்கி ஓடுதல்



பின்னோக்கி ஓடுதல்



வலது-இடது பக்கமாக ஓடுதல்





பாம்பு போல் வளைந்து ஓடுதல்



வட்டமாக ஓடுதல்



சதுரத்தில் ஓடுதல்



ஓடிக்கொண்டே தரையை தொடுதல்

- ஓடும்போது தரையை ஒவ்வொரு முறையும் மாறி மாறி கைகளால் தொட்டுக்கொண்டே செல்ல வேண்டும்



இரண்டு கால்களாலும் குதித்தல்

**மணவர்களுக்காக**

- உங்களுக்கு இந்த வகையான ஓட்டப்பியற்சிகள் பிடித்திருந்தால், அல்லது வேறு ஏதேனும் வகைகள் தெரிந்தால், ஆசிரியரிடம் சொல்லி அவற்றைக் காண்பியுங்கள்.



## குழுக்களின் செயல்பாடுகளைத் தூண்டுதல்

ஆசிரியர் ஃப்ரிஸ்பியை வீச வேண்டும் மாணவர்கள் அதைப் பிடித்து மீண்டும் ஆசிரியரிடம் வீச வேண்டும்



ஃப்ரிஸ்பியை எறிவதும் பிடிப்பதும்



ஆரம்பம் ஓட்டப் பந்தயம் முடிவு

### ஆசிரியருக்கு

- பல்வேறு வகையான முறைசாரா செயல்பாடுகளை ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளை முயன்று பாருங்கள்

## 2.2 சிறப்பு உடற்பயிற்சிகள்



### • ஏ.பி.சி. பயிற்சிகள்



கைகளை ஆட்டுதல்

இடத்திலேயே குதித்தல்

ஒன்றன் பின் ஒன்றாக குதிகால்களை தூக்குதல்

முட்டியை மடக்காமல் சிறிய சிறிய அடிகள் எடுத்து நடத்தல்





குதித்தல்

பின்புற கிக்

ஹை நீ/முட்டியை உயரமாக தூக்குதல்

ஸ்பிளிட் ஸ்குவாட் ஜம்ப்

**ஆசிரியர்களுக்கு**

- அ. சுறுசுறுப்பு, ஆ. சமநிலை, இ. ஒருங்கிணைப்பு ஆகிய திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள், செயல்முறைகள் மற்றும் செயல்பாடுகள்.
- ட்ரில்ஸ் = பயிற்சி



## • திசை சார்ந்த பயிற்சி

விளையாட்டுகளில், முன்னோக்கி, பின்னோக்கி, பக்கவாட்டில் அல்லது எதிர் திசைகளில் ஓட வேண்டிய செயல்களைச் செய்வது அல்லது மாற்றுவது திசை சார்ந்த என்று அழைக்கப்படுகிறது. அதை பின்வருமாறு பல்வேறு வழிகளில் பயிற்சி செய்வது நன்மை தரும்.

### • திசை சார்ந்த பயிற்சி 1






முதல் மூலையிலிருந்து இரண்டாவது மூலைக்கு ஓடுங்கள்.
இரண்டாம் மூலையிலிருந்து முதல் மூலை வரை பின்னோக்கிச் செல்லவும்.
மூலை 1- இலிருந்து மூலை 3 வரை ஓடுங்கள்.
3 ஆம் மூலையிலிருந்து 1 ஆம் மூலைக்குத் திரும்பி ஓடி வாருங்கள்.

### பன்முகத்தன்மை

முனையின் அருகில் –

- வரும்போதும் போகும்போதும் இரண்டு கைகளையும் வீசி ஓடுதல்.
- வரும்போதும் போகும்போதும் குதித்துக் கொண்டே செல்லுதல்.
- வரும்போதும் போகும்போதும் குனிந்து கோட்டை தொட்டுக்கொண்டே செல்லுதல்.

## • திசை சார்ந்த பயிற்சி 2






1) 1-ஆம் முனையிலிருந்து 2-ஆம் முனை வரை ஓடிச் செல்லுங்கள்.

2) 2-ஆம் முனையிலிருந்து 3-ஆம் முனை வரை குறுக்கு கால் எடுத்து வைத்து செல்லுங்கள் (முகம் வெளிப்புறமாக இருக்க வேண்டும்)

3) 3-ஆம் முனையிலிருந்து 4-ஆம் முனை வரை பின்னால் திரும்பி ஓடிச் செல்லுங்கள் (முகம் வெளிப்புறமாக இருக்க வேண்டும்).

4) 4-ஆம் முனையிலிருந்து 1-ஆம் முனை வரை குறுக்கு கால் எடுத்து வைத்து செல்லுங்கள் (முகம் உட்புறமாக இருக்க வேண்டும்).





- **திசை சார்ந்த பயிற்சி 3**




கோணம் 1-லிருந்து 2-க்கும், 2-லிருந்து 3-க்கும், 3-லிருந்து 1-க்கும் ஓடிச்சென்று. பிறகு, கோணம் 2 மற்றும் 3-ஐச் சுற்றித் திரும்பி, மீண்டும் கோணம் 1-க்கு வாருங்கள்.

- **திசை சார்ந்த பயிற்சி 4**




- ஏ முதல் பி வரை - ஓடிச்செல்லுங்கள்.
- பி முதல் சி வரை - வலது பக்கம் ஷஃபிள் (கால்களை மெது வாக தேய்த்து நடத்தல்) செய்து செல்லுங்கள்.
- சி முதல் டி வரை - இடது பக்கம் ஷஃபிள் செய்து செல்லுங்கள்.
- டி முதல் பி வரை - வலது பக்கம் ஷஃபிள் செய்து செல்லுங்கள்.
- பி முதல் ஏ வரை - பின்னோக்கி ஓடுங்கள்.

## • திசை சார்ந்த பயிற்சி 5





- நீல கூம்பிலிருந்து ஓடத் தொடங்குங்கள்.
- நீங்கள் முதல் சிவப்பு கோளத்தை அடைந்ததும், அந்தக் கோளத்தைச் சுற்றி ஓடி இரண்டாவது சிவப்பு கோளத்தை நோக்கிச் செல்லுங்கள்.
- இரண்டாவது சிவப்பு கோளத்தைச் சுற்றிச் சென்று, கிடைமட்டக் கோட்டிற்கு நேராகச் செல்லவும்.
- கோட்டை அடைவதற்கு முன்பு, பச்சை அல்லது மஞ்சள் கூம்புக்கு ஓடுமாறு ஆசிரியர் உங்களிடம் கூறுவார். அந்த கூம்பு வரை ஓடிச் செல்லுங்கள்.



மாறுபாடு : முதல் அல்லது இரண்டாவது கூம்பிலிருந்து ஒரு நேர்கோடு வரை ஓடுதல்.

- ஒரு பக்கமாக ஓடுதல்.
- பின்னோக்கி ஓடுதல்.

## 2.3 தடைச் சங்கிலி

- தடைச்சங்கிலி 1



• தடைச் சங்கிலி 2


ஆரம்பம்
தடைகளைத் தாண்டி குதித்தல்
முன்நோக்கி குட்டிக்கரணம் அடித்தல்
ஓடுதல்
ஏணி வழியாக செல்லுதல்
தவழ்ந்து செல்லுதல்
முழங்கால்களை உயர்த்தி ஓடுதல்
முடிவு
சமநிலையுடன் ஓடுதல்

## • தடைச் சங்கிலி 3




### ஆசிரியர்களுக்கு

- படத்தில் காட்டியுள்ளபடி பயிற்சியைச் செய்யவும்.
- வரிசையில் மாற்றம் செய்யலாம்.
- கிடைக்கும் நேரத்திற்கு ஏற்ப செயல்களை எத்தனை முறை செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கவும்.
- உங்கள் கற்பனைத்திறனை பயன்படுத்தி புதிய பயிற்சிகளை உருவாக்கி மாணவர்களை அவற்றை செய்ய வையுங்கள்

• தடைச் சங்கிலி 4








10 முறை உட்கார்ந்து எழுதல் (ஸ்குவாட்)

ஓடு



பாம்பு வடிவில் ஓடுதல்

ஓடுதல்



முன்னோக்கி குட்டிக்கரணம் அடித்தல்

ஓடுதல்



தடைகளைத் தாண்டி குதித்தல்





சமநிலையுடன் ஓடுதல்



கூம்புகளுக்கு மேல் குதித்தல்





## 2.4 உடற்பயிற்சித் தொடர் - 1

• உடற்பயிற்சி தொடர் - 1




### சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- உங்களுக்கு தடை சங்கிலி பிடித்திருக்கிறதா ஆம் ☐ இல்லை ☐
- உங்களுக்கு எந்தத் தொடர் கடினமாக இருந்தது என்பதை தெரிவிக்கவும் ___________

## • உடற்பயிற்சி தொடர் - 2








## • உடற்பயிற்சி தொடர் - 3



# • உடற்பயிற்சி தொடர் - 4



## • உடற்பயிற்சி தொடர் - 5



## • உடற்பயிற்சி தொடர் - 6




### சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- உடற்பயிற்சி தொடரை நீங்கள் முடித்தீர்களா? ஆம் ☐ இல்லை ☐
- அதில் உள்ள அனைத்துஉடற்பயிற்சிகளையும் உங்களால் செய்ய முடிந்ததா? ஆம் ☐ இல்லை ☐
- எந்த தொடர் கடினமாக இருந்ததோ அதை இங்கே எழுதுங்கள் ——————————

## 2.5 சாகச பயிற்சி

- **ஜங்கிள்ஜிம் ஏறும் கூண்டு / கம்பி கூண்டு**







தொங்குதல்



தொங்கியபடியே
ஊஞ்சல் ஆடுதல்

## • மனித கோபுரங்கள்



1



2



3



4



5



6



7



8

### ஆசிரியர்களுக்கு

- மனிதக் கோபுரங்களை உருவாக்கும் போது, மாணவர்களின் திறனைக் கருத்தில் கொண்டு கோபுரங்களில் அவர்களுக்கான இடத்தை முடிவு செய்யுங்கள்.
- மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கைக்காக உடற்பயிற்சி மெத்தைகள் அமைக்கவும்.
- மாணவர்கள் அதிக தைரியம் காட்டினால், அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்.
- தேவைப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.



9



10



11

## சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- கோபுரங்களைக் கட்டும் போது உங்களால் சமநிலையைத் தக்கவைத்துக் கொள்ள முடிந்ததா? ஆம் ☐ இல்லை ☐
- கொடுக்கப்பட்ட கோபுரங்களில் எந்தக் கோபுரம் உங்களுக்குக் கடினமாக இருந்தது? அதைக் காட்டவும் ––––––––––

## 2.6 தாளப் பயிற்சிகள்

### • ஏரோபிக்ஸ்



முழங்கால்
வரை



கை அசைவுடன்
முழங்கால் வரை



பக்கவாட்டு அசைவு



எல் வடிவம்



1 2 3 4

முன்னோக்கி எட்டு வைத்தல்



1 2 3 4

பின்னோக்கி எட்டு வைத்தல்

## • உபகரணமில்லா அணிவகுப்பு பயிற்சி : அமர்ந்து செய்வது



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 1**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 2**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 3**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 4**

## • உபகரணமில்லா அணிவகுப்பு பயிற்சி : நின்று செய்வது

**வகை 1**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 2**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 3**



தொடக்க நிலை 1 2 3 4

**வகை 4**



தொடக்க நிலை 1 2 3 4

## • உபகரணத்துடன் கூடிய பயிற்சி : வளைய பயிற்சி




வகை 1




வகை 2




வகை 3




வகை 4

• கொத்து உடற்பயிற்சி









## • நடன பாணி உடற்பயிற்சி



1. குதித்தவாறு இடது மற்றும் வலது கைகளை உயர்த்துதல்



2. பாதங்களை அகற்றி வைத்தபடி இரு கைகளையும் இடது புறமாகவும் வலதுபுறமாகவும் மேல்நோக்கி உயர்த்துதல்



3. பாதி குனிந்த நிலையில் தொடைகளைத் தட்டிவிட்டு, நேராக எழுந்து நின்று தலைக்கு மேலே இரண்டு முறை கைதட்டுதல்



4. இடதுபுறமாக இரண்டு அடி எடுத்து வைத்து, உங்கள் கையால் மேல்நோக்கிக் குத்துங்கள், பிறகு வலது புறமாக ஒரு அடி எடுத்து வைத்து அதே செயலை மீண்டும் செய்யுங்கள்



5. ஒருமுறை இடது காலை முன்னோக்கி உயர்த்தி, வலது கையால் முன்னோக்கி குத்தவும், பின்னர் வலது காலை உயர்த்தி, இடது கையால் முன்னோக்கி குத்தவும்.



6. இடது காலை இடது பக்கத்தில் வைத்துக் கொண்டு இரு கைகளையும் இடது பக்கமாக ஒன்றையொன்று சுற்றி சுழற்றவும், பின்னர் வலது காலை வலது பக்கத்தில் வைத்துக் கொண்டு கைகளை வலது பக்கமாக சுழற்றவும்



7. 6-ல் செய்தது போலவே பாதங்களை வைத்துக் கொண்டு கைகளை மேலும் கீழும் அசைக்கவும்



8. இரு கைகளாலும் திருகி, கைகளை முழங்கைகளில் வளைத்தல்



9. மல்லாந்து படுத்துக் கொண்டு நடப்பது போல் கால்களை அசைத்தல்



10. மல்லாந்து படுத்துக் கொண்டு உங்கள் கால்களால் மிதிவண்டியை மிதிப்பது போல் செய்தல்

## 2.7 இந்திய உடற்பயிற்சி

• **பாரம்பரிய உடற்பயிற்சி**



புக்டி

கைபிடித்து சுற்றும் விளையாட்டு



ஜிம்மா

கைபிடித்து முன்பின் ஆடும் விளையாட்டு



ஸ்கிப்பிங் / கயிறு தாண்டுதல்



ஒரு காலில் கயிறு தாண்டுதல்



மூவர் கயிறு தாண்டுதல்

### சுய மதிப்பீடு

உங்கள் பதிலுக்கு அருகில் ✓ இந்த குறியை இடுங்கள்.

- கயிறு தாண்டும்போது அந்த மூன்றில் உங்களுக்கு எது மிகவும் பிடித்திருந்தது? தாண்டுதல் ☐ கயிறு சுழற்றுதல் ☐ இரண்டும் ☐
- இருவர் இருவராக ஜோடி சேர்ந்து ஒருவர் மற்றவரின் தாண்டிய எண்ணிக்கையை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் __________

## 2.8 சூரிய நமஸ்காரம்





# பிரிவு 3 : அணிவகுப்பு பயிற்சி



**ஆசிரியர்களுக்கு**

- காலணிகள் தேவை.
- அனைத்துக் கட்டளைகளும் இடது காலில் தொடங்கி வலது காலில் முடிய வேண்டும்.
- கட்டளைகளை இடும்போது ஆசிரியர் எப்போதும் சாவ்தான் நிலையில் இருக்க வேண்டும்.
- சிறந்த மாதிரியை நேரடியாக செய்து காட்டவும்.
- தொடங்கு என்ற வார்த்தையை எந்த வரிசைபடியும் பயன்படுத்த வேண்டாம்.

## (3.1) சாவ்தான் / கவனம்

அனைத்து கட்டளைகளும் சாவ்தான் நிலையில் இருந்துதான் தொடங்கும்.

கட்டளை : ஸ்குவாட் - ட் சாவ்தான்.

எண்ணிக்கை : ஒன்று

தேவை : உங்களை விட வயதில் மூத்த ஒருவருடன் உரையாடும் போதோ அல்லது பேசும்போதோ சாவ்தான் நிலையில் இருக்க வேண்டும்.

நடவடிக்கை : கட்டளைப் பெற்றவுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை மேற்கொள்ளவும்.

- ஒன்று - இடது காலை முழங்காலிலிருந்து சுமார் 90 டிகிரிக்கு உயர்த்தி, பின்னர் பாதத்தின் குதிகாலைத் தரையில் தொட்டு பலமாக அடித்து ஒன்று வரை எண்ணவும்.
- நேராக நிற்கவும்.



- இரு குதிகால்களையும் ஒன்றாகச் சேர்த்து, பாதங்களுக்கு இடையில் சுமார் 30 டிகிரி கோணத்தை உருவாக்குங்கள்.
- உங்கள் தோள்களைத் தரைக்கு இணையாக வைத்திருங்கள்..
- உங்கள் கைகளை உடலுக்கு அருகில் வைத்தவாறு நேராகக் கீழே இழுக்கவும்.
- கைகளின் முட்டிகளை இயல்பாக மூடவும்.
- பார்வையை நேராக முன்னால் வைக்கவும்.



## (3.2) விஷ்ராம் / ஓய்வு நிலை



**கட்டளை :** ஸ்குவாட் விஷ்ராம்

**எண்ணிக்கை :** ஒன்று

**தேவை**

- உங்களை விட வயதில் மூத்த ஒருவருடன் பேசும்போது அதிக நேரம் எடுக்குமானால், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
- ஆசிரியர் எந்தவொரு செயலையும் நேரடியாக காண்பிக்கும்போது.
- உடற்பயிற்சி முடிந்ததும்.

**செயல்முறை**

- ஒன்று - இடது காலை முழங்காலிலிருந்து 90 டிகிரிக்கு உயர்த்தி, இடது பக்கத் தரையில் பலமாக அடித்து ஒன்று என எண்ணவும் இவ்வாறு அனைத்துச் செயல்களும் ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டும்.
- இரு பாதங்களின் கால் விரல்களுக்கு இடையே 10 முதல் 11 அங்குல இடைவெளி (உங்கள் தோள்பட்டை அகலத் திற்கு இருக்குமாறு) பார்த்துக் கொள்ளவும்.
- இரு கைகளையும் பின்னால் கொண்டு செல்லுங்கள், உங்கள் வலது கை விரல்களை இடது கை விரல்களின் மீதும், வலது கை கட்டை விரலை இடது கட்டை விரலின் மீதும் வையுங்கள், இரு பாதங்களிலும் சமமான எடையை கொடுக்கவும்.



**முக்கியம் :** சாவ்தான் நிலையிலிருந்து விஷ்ராம் நிலைக்கும், விஷ்ராம் நிலையிலிருந்து சாவ்தான் நிலைக்கும் செல்லும் பயிற்சியை செய்யும் போது உங்கள் கைகளை உடலுக்கு அருகில் வைத்திருங்கள்.

சாவ்தான், விஷ்ராம் பயிற்சியைச் செய்யும் போது, கழுத்தை வளைப்பது, கைகளை அசைப்பது, தோள்களை உயர்த்துவது அல்லது இடுப்பை வளைப்பது போன்ற தேவையற்ற அசைவுகளைச் செய்யாதீர்கள்.



## (3.3) ஆராம்சே / வசதியாக இரு

நீங்கள் நீண்ட நேரம் விஷ்ராம் நிலையில் இருக்க விரும்பினால், இந்தப் பயிற்சி வசதியான நிலையில் செய்யப்படுகிறது. இந்த நிலை, கால்களை அசைக்காமல் உடலைச் சற்றுத் தளர்த்திக்கொள்ள அனுமதிக்கிறது, கழுத்து மற்றும் தலையை அசைக்க அனுமதிக்கிறது, கைகளின் நிலையை மாற்ற வேண்டாம்.

**கட்டளை :** ஸ்குவாட் ஆராம் சே (வசதியாக)

**தேவை**

- நீண்ட நேரம் தொடர்ச்சியான செயல்பாட்டிற்குப் பிறகு உடலுக்கு ஓய்வு அளிக்க.
- ஆசிரியர் விளக்குவதற்கு அதிக நேரம் தேவைப்படும்போது.

**செயல்முறை :** ஆராம்சே என்ற கட்டளையைப் பெற்றவுடன், கால்களை அசைக்காமல் உடலை விஷ்ராம் நிலையில் வைத்திருக்கவும்.



## (3.4) வணக்கம் / சல்யூட்

கட்டளை : ஸ்குவாட் சல்யூட்

எண்ணுதல் : ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்று

தேவை : கொடிக்கும் பிரமுகர்களுக்கும் மரியாதை செலுத்துவதற்காக

செயல் : ஸ்குவாட் சல்யூட்இந்தக் கட்டளையைப் பெற்றவுடன், கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படி செயல்களைச் செய்யவும்.

1) ஒன்று - இந்த எண்ணிக்கையில் வலது கையை வலது பக்கத்திலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி, முழங்கையில் வழைத்து, உள்ளங்கையை நோக்கி, ஆள்காட்டி விரலை வலது புருவத்தின் நடுப்பகுதியில் வைத்து நெற்றிக்கு முன்னால் வைக்கவும்.

